**தென் மாகாண சபை - 2017**

-----------------------------------------------------

தென் மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 02. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தென் மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மீளாய்வாண்டிற்கான தென் மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2018 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அக்கணக்கு மீண்டும் திருத்தப்பட்டு 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் 06 ஆந் திகதி வரைவு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் திருத்திய கணக்குகள் 2018 யூலை 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

2018 மே 31 இல் உள்ளவாறு ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 25 | 25 |
| (ii) | வருமானக் கணக்குகள் | 28 | 28 |
| (iii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 90 | 90 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 10 | 10 |
| (v) | நிதியக் கணக்குகள் | 07 | 07 |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 05 | 05 |
| | மொத்தம் | 165 | 165 |

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 கணக்குகளில் காணப்பட்ட ரூபா 25,353,896 ஆன வழியில் காசு மீதியொன்று 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கிடைக்காதிருந்தமையால் இப்பெறுமதி வழியில் உள்ள காசு அல்ல என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 31202 ஆம் விடய இலக்க கெகநதுர கோழிப் பண்ணை பேணிச் செல்லல் மற்றும் விதை பாதுகாப்பு வர்த்தக முற்பணக் கணக்கின் தேறிய இலாபம் ரூபா 2,546,670 தொகை 31203 ஆம் விடய இலக்க கெகநதுர கால்நடை கட்டுப்பாட்டு பயிற்சி நிலையத்தின் வர்த்தக முற்பணக் கணக்கின் தேறிய இலாபம் ரூபா 292,175 மற்றும் 32048 ஆம் இலக்க வக்வெல்ல முகாமைத்துவ மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வர்த்தக முற்பணக் கணக்கின் தேறிய இலாபம் 10,312,745 என்பன வர்த்தக முற்பணக் கணக்குகளின் இலாபத்தை மாற்றும் வருமானக் குறியீட்டு இலக்கம் 2003–02–22 இற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதான செயலாளர் அலுவலகத்தின் மூலதன சொத்துக்களை புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவின விடயத்தின் கீழ் தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் ஊடாக தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலவிடுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 18,650,000 தொகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,650,000 தொகை எஞ்சியிருக்கையில் முழுத்தொகையும் செலவு செய்யப்பட்டதாக பிரதான அமைச்சினால் தலைமை செயலாளர் அலுவலகத்திற்கு மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபை நிதியக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 2,192,646,151 கூட்டுமொத்தமான 03 கணக்கு விடயங்கள் 49 உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றை உறுதிப்படுத்தும் துணை ஏடுகளிலும் அறிக்கைகளிலும் காட்டப்பட்ட மீதிகளுக்குமிடையே இணக்கமின்மைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் ரூபா 839,682,919 கூட்டுத்தொகையான இருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

தென் மாகாணத்தில் அமைந்துள்ள 11 வலய கல்வி அலுவலகங்களின் அனைத்து வலய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்கிடையே ரூபா 12,569,723 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் மீதியான ரூபா 1,235,649,214 தொகையில் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 824 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 30,816,573 கூட்டுமொத்தமான கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

| விபரம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் |
|---|---|---|
| | | ரூபா |
| இடமாற்றம் பெற்றுச் சென்றோர் | 552 | 21,372,914 |
| ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்தோர் | 207 | 7,075,391 |
| வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட | 25 | 1,115,470 |
| சேவையை வரிதாக்கிச் சென்ற சம்பளமற்ற விடுமுறை | 40 | 1, 252,798 |
| | 824 | 30,816,573 |

(ஆ) தென் மாகாணத்திலுள்ள நிறுவனங்கள், ஏனைய மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த 503 உத்தியோகத்தர்கள் தொடர்பாகச் தீர்த்துவைக்கப்பட வேண்டிய ரூபா 20,535,308 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் காணப்பட்டன.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | தொகை | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை IX ஆம் அத்தியத்தின் 2.2 ஆம் பந்தி | 536,774 | வக்வெல்ல முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவகத்தினால் வளவாளர் களுக்கு கொடுப்பனவு செய்யும் கட்டணத்திலிருந்து 10 சதவீதம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் இந் நிறுவகத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமூகமளித்த வளவாளர்களுக்கு செலுத்திய ரூபா 5,367,740 தொகையில் 10 சதவீதம் அதாவது ரூபா 536,774 தொகை கழித்து திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 571 | 70,968,421 | வைப்புச் செய்யப்பட்டு 2 ஆண்டுகளைக் கடந்த 10 நிறுவனங்களுக்குரிய 459 பொது வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மாகாண நிதி விதி | | |
| | (i) விதி 259.2 | 277,815,207 | கணக்காண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி தீர்க்கப்பட்டு எஞ்சிய கட்டுநிதி மீதி அடுத்த ஆண்டின் சனவரி 10 ஆந் திகதி அல்லது மாகாண திறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் மாகாண திறைசேரிக்கு தீர்வு செய்யப்பட வேண்டும். எனினும், ரூபா 392,441,520 ஆன தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதிகளில் மொத்தம் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | 277,815,207 ஆன 03 கட்டுநிதி மீதிகள் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 282.3 | - | முறைப்படி தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கு கணக்கிணக்கக்கூற்று அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தென் மாகாண மோட்டார் வாகன திணைக்களத்திற்குரிய 03 வங்கிக் கணக்குகள் 29 சந்தர்ப்பங்களின் போது அத்தேவைப்பாடு நிறைவேற்றப்படக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 283.4 | 4,919,377 | 05 நிறுவனங்களின் 15 வங்கி நடைமுறை கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தை மிகைத்த 345 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) சுற்றறிக்கை
------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2012 சனவரி 02 ஆந் திகதிய ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 9,065,512 | மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய நிறுவனங்களில் பல்வேறு நிர்மாண வேலைகளை மேற்கொள்ளும் போது 09 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சடுக அடிப்படையிலான நேரடி ஒப்பந்த கையளிப்பின் போது திணைக்கள தலைவர் மற்றும் பிரதேச செயலாளரால் பெயரிடப்படும் மூன்று பேர் கொண்ட குழுவொன்றின் மூலம் பெயரிடப்படுகின்ற குறித்த சங்கங்களின் தகைமை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் பொருத்தமான சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு குள ஒப்பந்தக் கையளிப்பு பரிந்துரைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2001 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு செயலாளரின் சுற்றறிக்கை | - | ஒன்றிணைந்த சேவைகள், மாகாண அரச சேவைகள் மற்றும் திணைக்கள மயப்படுத்திய சேவை போன்ற சேவைகளின் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக பொதுக் கொள்கையொன்றின் பிரகாரம் ஒரு சேவை நிலையத்தில் ஆகக்கூடிய சேவைக் காலம் 05 வருடங்கள் கடந்த உத்தியோகத்தர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் தென் மாகாண தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் 30 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அங்கு சேவையாற்றி வந்தனர். |

(உ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவை

| | | |
|---|---|---|
| (i) 2.9.1 ஆம் பந்தி | 366,500 | கேள்விக்குரிய பதிவேடுகளை பரீட்சித்தல் அல்லது வேறு ஏதேனும் வேலையொன்றை அங்கத்தவர்களால் வழமையான கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் கொடுப்பனவிற்கு உரித்து பெறுவதற்காக எடுக்கப்படும் கேள்வி தீர்மானத்திற்குரித்தாக குறைந்தது இரண்டு தடவையானது வழமையான வேலை நேரத்திற்கு புறம்பாக கூட்டங்கள் கட்டாயமாக இருந்த போதிலும் தென் மாகாண தலைமை அமைச்சினால் எடுக்கப்படுகின்ற சகல பெறுகை கூட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் கடமை நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 08 உத்தியோகத்தர்களுக்கு படிகளும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) 3.6.1 ஆம் பந்தி | 3,990,000 | ஆரம்ப பெறுகை திகதியிலிருந்து 06 மாதங்களுக்குரிய ஆரம்ப பெறுகை பெறுமதியிலிருந்து 50 சதவீதம் வரை மீண்டும் கட்டணை இட முடியுமான போதிலும், பிரதான அமைச்சினால் ஒப்பரேஷன் மைக்ரோஸ்கோப் (Operation Microscope) இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

### 2.2.7 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) தென் மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

(i) தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் இரண்டு கட்டங்களில் 628 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 3 மாவட்டங்களில் அமைந்துள்ள 27 உள்ளூராட்சி மன்றங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 55 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், முதலாவது கட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்ட 166 உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளுக்காக செலுத்தப்பட வேண்டிய பணம் 2017 நவம்பர் 8 வரை செலுத்தப்படாதிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 8,290,000 ஆக இருந்தது.

(iii) முதலாவது கட்டத்தில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் 29 பொதுமக்கள் பிரதிநிதி மோட்டார் சைக்கிள்களுக்காக பணம் செலுத்தியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பணம் செலுத்திய திகதி அல்லது அதற்குரிய பற்றுச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) அரச உத்தியோகத்தர்களாக மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக மீண்டும் மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. தெரிவுப் பரிசோதனையின் போது அவ்வாறான 7 உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டன.

(v) மோட்டார் சைக்கிள் வழங்கும் போது அறவிடப்படுகின்ற பணம் துரிதமாக தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி திணைக்களத்தினால் அறவிடப்பட்ட ரூபா 500,000 தொகை 2017 நவம்பர் 15 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 மே 11 ஆந் திகதிய ஜீ/எஸ்பீ/1/15 ஆம் இலக்க ஆளுநர் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரிய விடயமொன்றான செயற்பாட்டு விதிக்கோவையொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளும் வரை தேவையான மாற்றங்களுடன் பின்பற்றுவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விதிக்கோவையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுநரின் இணக்கப்பாடு கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு செயற்பாட்டு விதிக்கோவையொன்றை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெக்வெல்ல பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பின் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் பிரதி / உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அச்சேவையின் II/III ஆம் பந்தியின் உத்தியோகத்தர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கையில் பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்வாதற்காக தென் மாகாண பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) இற்கு கணக்காணிப்பு படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 608,350 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் மாகாண சபையின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிப்பு அவரின் வழமையான கடமையாக இருப்பதால் அதற்காக அவருக்கு மேலதிக படியொன்று கொடுப்பனவு செய்தல் முறையற்றதாக இருந்தது.

(ஈ) மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்ட வரையறைகள் பின்பற்றாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) செலவினத்தின் கூடிய எல்லை ரூபா 113,951 இற்கும் ரூபா 3,092,770 இற்கும் இடையே வரையறைகளை மிகைத்த 3 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ii) பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லையை நோக்கி ரூபா 130 ஆலும் ரூபா 243,368 ஆலும் அடையப்படாத இரண்டு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iii) வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லை ரூபா 833 இற்கும் ரூபா 20,501,431 இற்கும் இடைப்பட்ட வீச்சில் மிகைத்த 5 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**3. வருமான முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளில் மாகாண சபையால் உழைக்கப்பட்டிருந்த வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருமான வகை | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரி வருமானம் | 7,724 | 6,440 | 5,654 | 4,864 | 4,039 |
| வரியல்லா வருமானம் | 1,068 | 789 | 650 | 546 | 717 |
| மொத்தம் | 8,792 | 7,229 | 6,304 | 5,410 | 4,756 |

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வரி மற்றும் வரியல்லாத வருமானம் முறையே ரூபா 1,284 ஆலும் ரூா 279 மில்லியனாலும் அதாவது 20 சதவீதத்தினாலும் 35 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான விபரமொன்று கீழே தரப்படுகின்றது.

| வருமான விபரம் | 2017.01.01 இல் உள்ளவாறான மீதி | ஆண்டிற்கான மதிப்பீடு | ஆண்டின் போது அறவீடு | ஆண்டின் போது விடுவித்தல்கள் | 2017.12.31 இல் உள்ளவாறான மீதி | அறவீட்டின் சதவீதம் | விடுவித்தல்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % | % |
| ஆதனங்கள் கையளிப்பதின் பேரில் முத்திரைக் கட்டணம் | 827.7 | 409.2 | 118.3 | 388.8 | 730.4 | 9.56 | 31.43 |
| கணிப் பொருள் மற்றும் முத்திரை வரி | 4.8 | 5.8 | 0.7 | 6.4 | 5.2 | 6.6 | 60.38 |
| விற்பனை புரள்வு வரி | 41.7 | - | 0.9 | 3.9 | 36.9 | 2.16 | 9.35 |
| மருந்து வியாபரிகளை பதிவுசெய்யும் கட்டணங்கள் | 1.9 | 1.7 | 0.8 | 0.4 | 2.3 | 22.22 | 11.11 |
| அரச கட்டிடங்களின் வாடகை | 1.4 | 0.6 | 0.6 | - | 1.4 | 30.00 | - |
| நீதி மன்றத் தண்டப்பணம் | - | - | - | - | 93.3 | - | - |
| தனியர் பஸ் வண்டிகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் | 3.0 | 2.4 | 1.5 | - | 3.9 | 27.78 | - |
| மொத்தம் | 880.5 | 419.7 | 122.8 | 399.5 | 873.4 | | |

*	2017 திசெம்பர் 31 ஆந் திகதி நிலுவை மீதி தயாரிக்கும் போது மதிப்பிடல், அறவிடுதல் மற்றும் தண்டப்பணம் விடுவிப்பதற்கு மேலதிகமாக வரவு அறிவித்தல், மற்றும் தண்டப்பணம் சீராக்கங்கள் மூலம் இறுதி வரி மீதி கணக்கிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆதனங்களை கையளிப்பதன் பேரில் முத்திரை வரி வருமானத்திற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதிகளிலும் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 9.56 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 31.43 சதவீதம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) கணிப்பொருள் உரித்தின் அடிப்படையில் வரி வருமானத்திற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதி நிலுவை மீதிகளிலும் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 6.6 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 60.38 சதவீதம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(iii) விற்பனை புரள்வு வரி வருமானத்திற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை மீதிகளில் 2.16 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 9.35 சதவீதம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்திலும் நிலுவை மீதிகளிலிருந்து குறைந்த சதவீதத்தால் அறவிடப்படுகையில் அதற்கு மேற்பட்ட கூடுதலான சதவீதமொன்று விடுவிக்கப்பட்டுள்ளதாக மேற்குறித்த (ஆ) (i) இலக்கம் முதல் (iii) வரையான அவதானிப்புக்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டின்போது மாகாண சபைக்குரிய கட்டிடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1.4 மில்லியன் நிலுவை கட்டிட வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) மீளாய்வாண்டின் போது தனியார் பஸ் உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3.9 மில்லியனான நிலுவை கேள்வி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்குரிய ரூபா 17,314,302 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் காணப்பட்டதுடன், அந்நிலுவை வருமானம் கள்ளு தறவணை, கள்ளு வடித்தல் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் இந்நாடு மற்றும் வெளிநாடு மதுபான நிலையங்கள் ஆகிய வருமான குறியீடுகளிலிருந்து எந்த வருமானக் குறியீட்டிற்குரியது என வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 422,079,412 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டும் வெளியிடப்பட்ட பற்றாக்குறை ரூபா 2,423,457,764 ஆக இருந்தது.

## 5. வணிக முற்பணக் கணக்குகள்

தென் மாகாண சபைக்குரிய நிறுவனங்களில் 10 வர்த்தக முற்பணக் கணக்குகள் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வர்த்தக முற்பணக் கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகள் பின்பற்றாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) ஆண்டின் இறுதியில் வரவு மீதியின் கூடிய எல்லை ரூபா 79,212 இற்கும் ரூபா 13,223,657 இற்கும் இடைப்பட்ட வீச்சில் மிகைத்திருந்த 6 சந்தப்பங்கள் காணப்பட்டன.

(ii) பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லையை நோக்கி 2 சந்தர்ப்பங்களில் முறையே ரூபா 947,200 ஆலும் ரூபா 1,236,027 அடையப் பெற்றருக்கவில்லை.

(ஆ) (i) மீளாய்வாண்டின் போது உத்தேச கட்டணங்களைச் செம்மையாக்குவதற்கு முன்னர் ரூபா 116,699,765 கூட்டுத்தொகையான இலாபத்துடனான 10 முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் காணப்பட்டதுடன், அதற்கு உத்தேச கட்டணங்களைச் செம்மையாக்கியதன் பின்னர் ரூபா 210,804,497 கூட்டுத்தொகையான நட்டத்தை காண்பித்த 05 முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் காணப்பட்டன.

(ii) 31502 ஆம் விடய இலக்க அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை மற்றும் பயிரிடல் திரவிய முற்பணக் கணக்கிற்குரித்தாக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் உத்தேச கட்டணங்கள் செம்மையாக்கபட்டிருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) திஸ்ஸமகராம பிரதேச செயலகத்திற்குரிய 03 அனுமதிப்பத்திர நிறுவனங்களினால் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மதுவரி அனுமதிப்பத்திரங்கள் கட்டணம், தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களாக மொத்தம் ரூபா 3,480,900 மற்றும் மதுவரி உதிரிப்பாக அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 100,000 வீதமான கட்டணங்கள் 2017 நவம்பர் 28 ஆந் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச செயலகத்தின் மூலம் நீண்டகால குத்தகை தொகை அறவிடுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரதேசத்தில் நீண்டகால குத்தகையின் கீழ் வழங்கியிருந்த காணிக்காக குத்தகை மற்றும் தண்டப்பணமாக மீளாய்வாண்டிற்காக 06 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 935,138 தொகையும் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்காக 03 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 860,404 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களிலிருந்து முறையான அனுமதியொன்றை பெற்றுக்கொள்ளாமல் தனியார் தொலைபேசி கம்பனியொன்றினால் பெருந்தோட்டை பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள அரசின் காணியொன்றில் 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட தொலைபேசி

கோபுர தூண் ஒன்றிற்காக நீண்டகால குத்தகையொன்று தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு குத்தகை வருமானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2,000,000 ஆன நிதிஏற்பாட்டின் பேரில் 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட மேற்குறித்த பிணியாளர் கூடத்திற்காக நிரந்தர மின்சார இணைப்பினை 2018 ஏப்ரல் வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அருகில் அமைந்துள்ள கட்டிடமொன்றிலிருந்து தற்காலிக மின்சார இணைப்பொன்று பாதுகாப்பற்ற வகையில் வழங்கி இந் நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) தென் மாகாண சுகாதார சேவைக்குரிய பிரதேச மருந்து களஞ்சியம் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் செயற்படுத்தப்பட்ட மருந்து முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 பிரதேச மருந்துகள் களஞ்சியங்கள், 4 ஆதார வைத்தியசாலைகள் மற்றும் மாகாணத்தில் அமைந்துள்ள 39 வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் என்பவற்றில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியான இருப்புக்களின் பெறுமதி ரூபா 19,988,383 ஆக இருந்தது.

(ii) தென் மாகாணத்தில் அமைந்துள்ள 03 பிரதேச களஞ்சியங்கள் 04 ஆதார வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் 60 சுகாதார நிறுவனங்கள் என்பவற்றில் தரத்தில் சித்தி பெறாத மருந்து இருப்பின் பெறுமதி ரூபா 10,173,634 ஆக இருந்தது. இவை நல்ல நிலையில் காணப்பட்ட மருந்துகளுடன் ஒன்றாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) 2017 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அம்பாந்தோட்டை பிரதேச களஞ்சியத்தில் காலாவதியான 996,000 கல்சியம் லக்கேட் மாத்திரைகள் (Tab Calcium Lactate) காணப்பட்டன. எனினும், இருப்பு பதிவேட்டின் பிரகாரம் இந்த அளவு மாத்திரைகள் 946,000 ஆக இருந்தது.

(iv) தென் மாகாண நிதி விதி 57(அ)(ii) இன் பிரகாரம் காலாவதியான மருந்து இருப்பினை கைதவிர்ப்பதற்காக குழுவொன்று நியமனம் செய்தல் தென் மாகாண பிரதம செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் மாகாண சுகாதார சேவைகள் செயலாளரினால் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டு அம்பாந்தோட்டை பிரதேச களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 1,325,422 பெறுமதியான காலாவதியான மருந்து இருப்புக்களில் ஒரு பகுதி அழிக்கப்பட்டிருந்தது.

(v) தென் மாகாணத்தில் அமைந்துள்ள 44 வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் என்பவற்றில் மருந்துக் களஞ்சியங்கள் காற்றுச்சீராக்கி செய்யப்படாதிருந்ததுடன், 64 நிறுவனங்களில் அதிகுளிரூட்டி வசதிகள் காணப்படவில்லை. 49 வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் என்பவற்றில் மின்பிறப்பாக்கிகள் இல்லாமல் இருந்ததுடன் 4 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கிகள் செயலற்றுக் காணப்பட்டன.

(vi) பாவனையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த Colostomy bags (30mm) பெயருடைய சிகிச்சை உபகரணத்தில் 1306 L வகையில் 180 அலகுகளும் 1361 J வகையில் 300 அலகுகளும் அம்பாந்தோட்டை பிரதேச மருந்துக் களஞ்சியத்தில் காணப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. பாவனை இடைநிறுத்தப்பட்ட இந்த சிகிச்சை உபகரணங்களை மீள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதாக இருந்த போதிலும் அதில் 200 அலகுகள் தங்கால சுகாதார

வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே பௌதீக மீதியில் 80 அலகுகள் பற்றாக்குறையாக காணப்பட்டன.

(vii) அம்பாந்தோட்டை பிரதேச மருந்துக் களஞ்சியத்தில் 2013 ஆம் ஆண்டின் போது கணிப்பீட்டு சபை மூலம் அங்கீகரிக்கப்பட்டு அழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மருந்து வகைகளை கையளிக்கும் போது 11 உருப்படிகளுக்குரிய 91173 அலகுகள் குறைத்துக் கையளிக்கப்பட்டிருந்தன. இப்பற்றாக்குறையை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(viii) கம்புறுபிட்டிய ஆதார வைத்தியசாலையில் 2017 யூன் 27 ஆந் திகதி அளவில் 2017 ஏப்ரல் 16 ஆந் திகதி காலாவதியான Cefuroxime Axetile Tablets USP 125 mg பெயருடைய 2500 மருந்து அலகுகள் பௌதீக ரீதியாக காணப்பட்ட போதிலும் இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் அவ்வாறான இருப்பு மீதியொன்று காணப்படவில்லை. வெளிநோயாளர் பிரிவின் நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்கும் போது இவ்வகை மாத்திரைகள் உள்ளவாறாக விநியோகிக்கப்பட்ட அளவை விட கூடிய அளவொன்று இருப்பு பதிவேட்டிலிருந்து கழிக்கப்பட்டுள்ளதாக தெரிவு பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(உ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போதும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போதும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 18,742,215 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வீரகெட்டிய மற்றும் கட்டுவன சுடலைச்சாலைகள் உரிய பிரதேச சபைகளுக்கு 2017 மார்ச் 03 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சுடலைச் சாலைகள் மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தல் நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொண்ட பாடசாலை பதிவேடுகளின் பிரகாரம் தென் மாகாணத்தினுள் 1048 மாகாண பாடசாலைகள் காணப்படுவதுடன் அதில் 169 பாடசாலைகளுக்குரிய கணக்காய்வின் மூலம் கோரப்பட்ட தகவல்கள் 2017 திசெம்பர் 15 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பாடசாலை பதிவேட்டிற்கு உட்படாத 08 பாடசாலைகள் உட்பட 887 பாடசாலைகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கல்வி நடவடிக்கைகளை தடையேதுமின்றி செயற்படுத்துவதற்காக அடிப்படை தேவையான மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நூலக மற்றும் அலுவலக மேசைகள் மற்றும் கதிரைகள் பற்றாக்குறை காணப்பட்ட பாடசாலைகள் 479 ஆக இருந்ததுடன் மிகைகள் காணப்பட்ட பாடசாலைகள் 38 ஆக இருந்தன.

(ii) வகுப்பறைகளுடன் கூடிய விஞ்ஞான ஆய்வுகூட கட்டிடங்கள், மனையியல் ஆய்வுகூடங்கள், உள்ளக ஆய்வுகூட அலகு, விவசாய பிரிவு, கணனிப் பிரிவு போன்ற கட்டிடங்கள் பற்றாக்குறையாக காணப்பட்ட பாடசாலைகள் 466 ஆக இருந்ததுடன் சில பாடசாலைகளில் காணப்பட்ட கட்டிடங்கள் தரத்தில் காணப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iii) பாவனைக்கு பொருத்தமற்ற நிலைமையில் கட்டிடங்கள் காணப்படும் 372 பாடசாலைகள் காணப்பட்டதுடன் கட்டிடங்கள் பற்றாக்குறை காரணமாக மேலும் அக்கட்டிடங்கள் பயன்படுத்தப்பட்டும் வந்தன.

(iv) மாணவர்களினதும் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ஆரோக்கிய வசதிகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட பாடசாலைகள் 284 ஆக இருந்ததுடன் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதில் சிக்கல் காணப்பட்ட

பாடசாலைகள் 289 ஆக இருந்தது. பாடசாலை நேரம் முழுவதும் நீர் கிடைக்கப் பெறாமல் காணப்படும் நீரை நாள் முழுவதற்கும் பயன்படுத்துவதற்கு போதியதாக இல்லாமை, கிடைக்கும் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படல் மற்றும் குழாய் வழியாக நீரைப் பெற்றுக்கொள்ளும் போது நீர் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு போதியளவு வசதிகள் இல்லாமை காரணமாக இவ்வாறு நீர் பிரச்சினைகள் தோன்றியிருந்தன.

(v) 11 பாடசாலைகளில் போதியளவு மலசலகூட வசதிகள் இருக்கையில் அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை (NSBS) செயற்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் மேலும் மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் கல்வி அதிகாரிகளால் பாடசாலைகளில் காணப்படும் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் புதிய மலசலகூடங்கள் நிர்மாணங்களுக்காக பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

(vi) 297 பாடசாலைகளில் அளவில் கற்பித்தல் நடவடிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட வகையில் மேற்கொள்வதற்காக தேவையான ஆசிரியர்களின் பற்றாக்குறைகள் உட்பட கல்விசாரா பதவியணியில் பற்றாக்குறை காணப்பட்டன. சில பாடசாலைகளில் இந்த ஆசிரியர் பற்றாக்குறைகள் வருடக் கணக்காக காணப்பட்டதுடன் முறையாக ஆசிரியர்கள் சமப்படுத்தப்படுவதன் மூலம் அநேகமான இந்த சிக்கல்களை தீர்வு செய்யக்கூடிய இயலுமை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(vii) தென் மாகாணத்தினுள் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் அளவு குறைவடைந்தமையால் குறைந்த மாணவர்களின் எண்ணிக்கையின் கீழ் பாடசாலைகளை நடாத்தி செல்வதால் அப்பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. கூடிய மாணவர் எண்ணிக்கையொன்று காணப்படும் பாடசாலைகளில் மாணவர்களுக்கு கிடைக்கும் அதிகமான வசதிகள் இப்பாடசாலைகளுக்காக கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இணைக்கப்பட்ட மனித வளங்கள் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. மேலும் சில சந்தர்ப்பங்களில் தேவையான மனித வளங்கள் கிடைத்திருக்கவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 100 மாணவர்களுக்கு குறைந்த 169 பாடசாலைகள் காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மாணவர்களின் எண்ணிக்கை | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 02 – 10 வரையான மாணவர்கள் | 05 |
| 11 – 20 வரையான மாணவர்கள் | 21 |
| 21 – 50 வரையான மாணவர்கள் | 72 |
| 51 – 99 வரையான மாணவர்கள் | 71 |
| மொத்தம் | 169 |

(viii) 07 பாடசாலைகளில் பாடசாலை காணியூடாக தனிப்பட்ட வீடுகளுக்காக செல்வதற்கு வீதிகள் அமைக்கப்பட்டிருந்தமையால் பாடசாலை மாணவர்கள்

உட்பட பாடசாலையில் காணப்படும் பௌதீக வளங்களின் பாதுகாப்பு தொடர்பில் இது போதியளவில் தாக்கமளித்திருந்தன.

(ix) கா/தொரப்பே மஹா வித்தியாலயத்திற்கு அண்மையில் காணப்படும் இறப்பர் உற்பத்தி தொழிற்சாலையொன்றின் மூலம் வெளிவரும் அதிக துர்நாற்றம் காரணமாக பாடசாலை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு தடைகளை எதிர்நோக்கி இருந்தன.

(ஊ) 2017 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் ருஹுனு சுற்றுலா பணியகத்தின் பதில் கடமை புரியும் முகாமைப் பணியாளராக தென் மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மற்றும் பிரதான அமைச்சின் தலைமைக் கணக்காளர் நியமிக்கப்பட்டிருந்தனர். அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 13.1(அ) பிரிவின் பிரகாரம் அமைச்சரவையால் நியமிக்கப்படாத உத்தியோகத்தரொருவர் பதில் கடமை புரியும் பதவிக்கு நியமிக்கும் போது அதனை நியமன அதிகாரியால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உரிய நியமனத்திற்காக நியமன அதிகாரியின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் v ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரமும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக்குழு செயற்பட்டு விதிக்கோவையின் xii ஆம் அத்தியாயத்தின் 142 பிரிவின் பிரகாரம் மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்படாமல் மேற்படி பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(எ) தாய் சுகாதார சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு மூலம் ரூபா 50.8 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியை மதிப்பிடுவதற்காக செயலாற்றல் சுட்டிகள் தீர்மானிக்கப்படாதிருந்தமையால் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கண்டறியப்பட முடியாதிருந்தது.

(ஏ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குரிய காலி மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் சேவை புரிந்த கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஆகஸ்ட் 12 ஆந் திகதி முதல் 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரை சம்பளமற்ற வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்றிருந்தார். மீண்டும் சேவைக்கு அறிக்கையிடப்படாததன் பேரில் 2013 செப்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி முதல் வேலையை வறிதாக்கிச் சென்றதாக நடவடிக்கை எடுப்பதாக மாகாண பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உத்தியோகத்தரிடமிருந்து பொறுப்பேற்றல் ஒன்று இல்லாததன் பேரில் 2014 மற்றும் மார்ச் 20 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட கட்டாய சேவைக்காலம் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக செலுத்த வேண்டுமென இணங்கப்பட்ட ரூபா 397,920 தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பதவியை வறிதாக்கி சென்ற அறிவித்தலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சிறிய மீனினங்களை பிடித்து பெரிய மீன் வரை வளர்க்கும் செயற்திட்டத்திற்காக ரிதியகம கால்நடைப் பண்ணைக்குரிய காணியில் 0.0818 ஹெக்டேயர் பகுதியொன்றில் 09 தடாகங்களை நிர்மாணிப்பதற்கும், காவலாளி வீடொன்றை நிர்மாணிப்பதற்குப் லொரியொன்று கொள்வனவு செய்வதற்காகவும் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 27,502,824 செலவிடப்பட்டிருந்த போதிலும்,

செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஒ) தென் மாகாண தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரசபையினால் கைத்தொழில் தகவல் முறைமையொன்றை வடிவமைப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 4,328,667 தொகை செலவிடப்பட்டிருந்தது. தகவல் முறைமையை வடிவமைத்த நிறுவனத்திற்கு மாத்திரம் முறைமையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தமையாலும் அதிகாரசபைக்கு தேவைப்பாட்டின் பிரகாரம் முறைமையை நாளதுவரையாக்குவதற்கு முடியாமையாலும் செலவிடப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமொன்றாக இருந்ததுடன் அதன் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஓ) குடாவெல்ல பின் அறுவடை உற்பத்தி நிறுவனமொன்றை ஆரம்பிப்பதற்கு கட்டிட நவீனமயப்படுத்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருததி, சுற்றாடல் அலுவல்கள், கிராமிய கைத்தொழில், மின்சாரம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 11,112,600 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பின் அறுவடை நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 25 ஆந் திகதியின் பின்னர் ரூபா 44,909,000 தொகையான 61 புதிய வேலை முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

### பிரதான செயற்பாடுகளுக்கு புறம்பான செயற்பாடுகள்

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திலிருந்து 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரச்சட்டத்தின் கீழ் சட்டம் மற்றும் சமாதானம் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், தென் மாகாண சபையின் பொதுவான பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் அதற்காக சிவில் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல், தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் பிரதான செயற்பணியாக இருந்த போதிலும், சட்டம் மற்றும் சமாதானம் செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,584,000 செலவிடப்பட்டு பிரதம செயலாளர் அலுவலகம், மாவட்ட செயலகம் மற்றும் 19 பிரதேச செயலகங்கள் என்பவற்றுக்காக 21 நெஸ்கபே இயந்திரங்கள் 19 புபே செட் மற்றும் 950 பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

## 6.3 மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்பும்

தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வத்துகெதர - சீனிகொட வீதி மற்றும் கா/வித்யா சமாதி மஹா பிரிவெனாவிற்கு நுழையும் வீதி நவீனமயப்படுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காலி மாவட்ட செயலகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டின் பேரில் செயற்படுத்தப்பட்ட வதுகெதர – சீனிகொட வீதி நவீனமயப்படுத்தலுக்குரிய மதிப்பீடு தயாரிக்கப்படும் போது தவறான அலகு விலையொன்றின் பேரில் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் இவ்வீதிக்கு வழங்கப்பட்டிருந்த அஸ்பொல்ட் இற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 485,040 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நவீனமயப்படுத்தப்பட்ட 2 வீதிகளில் செய்யப்பட்ட வேலைக்கு அளவு எடுக்கும் போது தவறாக அளவீடுகள் எடுத்தமையால் ரூபா 140,560 ஒப்பந்தகாரருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தகாரருக்கு பெறுமதி சேர் அடிப்படையிலான வரியாக ரூபா 1,991,716 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரிடமிருந்து முறையான வரிப் பட்டியல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு விசாரணை வழங்கப்பட்டதன் பின்னர் பெற்றுக்கொண்ட பட்டியல்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பட்டியல் இலக்கம், திகதி பெயர், முகவரி தயாரிக்கப்பட்டவரின் கையொப்பம் அதிகாரமுள்ளவரின் கையொப்பம் போன்ற விடயங்கள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. இக்காரணத்தின் பேரில் இவ்வரி நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

### 6.4 நிதியத்தின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போது 50 சதவீதத்தை விஞ்சிய சேமிப்புக்களைக் காண்பித்த செலவின விடயங்களுக்காக மொத்த தேறிய ஏற்பாடு மற்றும் அதில் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் சேமிக்கப்பட்ட நிதிஏற்பாடுகள் தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட விபரமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவினங்களின் விபரம் | செலவு விடயங்களின் எண்ணிக்கை | தேறிய நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவுகள் | நிதி ஏற்பாட்டில் சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவரும் செலவுகள் | 151 | 1,233,888,881 | 468,662,969 | 765,225,912 | 62 |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்துதலும் | 31 | 505,228,164 | 109,364,712 | 395,863,452 | 78 |
| மூலதன சொத்துக்களை கையேற்றல் | 5 | 85,310,938 | 15,379,239 | 69,931,699 | 82 |
| மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் | 10 | 539,227,105 | 215,672,316 | 323,554,789 | 60 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண மீண்டுவரும் செலவினங்கள்

(i) 12 தலைப்புக்களுக்குரிய 34 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 124,437,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 17 தலைப்புக்களுக்குரிய 117 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,109,451,881 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய ரூபா 640,788,912 கூட்டுத்தொகையான சேமிப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்துதலும்

(i) 07 தலைப்புக்களுக்குரிய 13 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 124,764,600 ஆன மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 07 தலைப்புக்களுக்குரிய 18 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 380,463,564 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 55 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்சிலான ரூபா 271,098,852 ஆன சேமிப்புக்கள் காணப்பட்டன.

(இ) மூலதன சொத்துக்களை கையேற்றல்

04 தலைப்புக்களுக்குரிய 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 85,310,938 தொகையான தேறிய நிதி ஏற்பாடுகளில் 66 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய ரூபா 669,931,699 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம்

04 தலைப்புக்களுக்குரிய 10 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 539,227,105 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் 50 சதவீதத்திலிருந்து 92 சதவீதம் வரையான வீச்சுடைய ரூபா 323,554,789 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

## 6.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் இரத்த வடிகட்டல் பிரிவினை ஸ்தாபிப்பதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,229,850 பெறுமதியான 15 மருத்துவ உபகரணங்கள் 2018 மே 30 ஆந் திகதி வரையில் விளைவற்றுக் காணப்பட்ட.

(ஆ) மாகாண சபை உறுப்பினர் நிதிஏற்பாடுகளின் கீழ் கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி பெருந்தெருக்கள் மற்றும் செய்திகள் அமைச்சினால் 02 செயற்திட்டங்கள் மூலம் முன்னைய ஆண்டிலும் மீளய்வாண்டின் போதும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,857,860 ஆன 8552 பாடசாலை புத்தகப் பைகள், ரூபா 3,773,400 கூட்டுத்தொகையான 19348 அப்பியாசப் புத்தகங்கள், மற்றும் 6026 அப்பியாசப் புத்தக தொகுதிகள் மற்றும் ரூபா 3,638,201 கூட்டுத்தொகையான பாடசாலை உபகரணங்கள் என்பன நலனாலிகளான பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்காமல் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் களஞ்சியசாலைகளிலும் வலயக் கல்வி அலுவலகங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குரிய கலுன்ன பட்டி நிலையத்தை மாதிரி பசுப் பண்ணையொன்றாக மாற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 8,250,624 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பசு மாட்டுப் பண்ணையொன்று ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை காரணிகளான புல், நீர் மற்றும் மனித வளங்கல் இல்லாமையால் பண்ணையின் செயற்பாடு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வக்வெல்ல முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் மூலம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்பட்ட உத்தியோகத்தர்களில் 5 சதவீதத்தை விட குறைந்த சதவீதமொன்று பங்குபற்றிய 17 நிகழ்ச்சித்திட்டங்கள் அவதானிக்கப்பட்டதுடன் பயிற்சி பாடநெறிகளுக்கு அழைக்கப்பட்ட பயிலுனர்களால் உரிய பயிற்சிக்காக சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களின் போது அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சமுகமளிக்காத உத்தியோகத்தர்களுக்காக வேறு உத்தியோகத்தர்கள் பங்குபெறச் செய்வது அவதானிக்கப்படவில்லை. பயிற்சிக்காக வருகை தரும் உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து அனுப்பிய கடிதத்தில் அவர்கள் சமூகமளிக்காவிட்டால் உரிய செலவினத்தை அவர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 6.7 பெறுகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள், கிராம அபிவிருத்தி, கலாசார மற்றும் கலை அலுவல்கள், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகாரம் மற்றும் உள்நாட்டு பொருளதார மேம்பாடு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், மனிதவலு மற்றும் தொழில்துறை அமைச்சினால் கலை நிறுவனமொன்றுக்காக மானியங்கள் வழங்கலின் கீழ் பொருட்கள் கொள்வனவின் போது தரத்தில் குறைந்த பொருட்களை கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இங்கு பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 07 வாத்திய உபகரண வகைகளுக்காக குறைந்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டு கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 147,350 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்ததுடன் 2017 பெப்ரவரி மாதம் கிடைக்கப்பெற்றிருந்த வாத்திய பொருட்கள் 08 மாத கால எல்லைக்குள் குறித்த கலை நிறுவனத்திற்கு வழங்கப்படாமல் ''சந்தலிய'' கலாசார நிலையத்தில் பாதுகாப்பற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட 22 மேளங்கள் பயன்படுத்த முடியாத நிலைமையில் இருந்தமை 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன.

(ஆ) தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள், கிராம அபிவிருத்தி, கலாசார மற்றும் கலை அலுவல்கள், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகாரம் மற்றும் உள்நாட்டு பொருளதார மேம்பாடு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், மனிதவலு மற்றும் தொழில்துறை அமைச்சினால் விளையாட்டுக் கழகங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 1,085,000 பெறுமதியான 100 வோலிபோல் தூண்கள் கொள்வனவு செய்யும் போது முதலாவது பெறுகை குழு பரிந்துரைகள் பெற்றுக் கொளவதற்கு முன்னர் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், இந்த கட்டளைக்காக வழங்குனருடன் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2017 ஆகஸ்ட் மாதத்தினுள் இந்த வொலிபோல் தூண்கள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதம் வரையிலும் வொலிபோல் தூண்கள் பயன்படுத்தாமல் ஆங்காங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

## 6.8 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிட்டபத்தர அம்பேவல குடிநீர் முன்மொழிவு செயற்திட்டத்திற்காக ரூபா 786,000 தொகையான மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 1, 2 மற்றும் 3 இற்கான தொழில்நுட்ப உத்தியோகத்தரால் முறையே ரூபா 185,032, ரூபா 18,431 மற்றும் ரூபா 72,480 தொகையான விசேட விலைகள் (Special Schedule Rate) தயாரிக்கப்பட்டு

குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்விலைகளுக்காக பிரதி தலைமை செயலாளர் (பொறியியலாளர் சேவை) இடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகார சங்கத்திற்கு ரூபா 95,007 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அமுகொடை மத்திய மருந்தகத்தின் வைத்தியர்களின் உத்தியோகபூர்வ விடுதி திருத்த வேலைக்காக ரூபா 1,411,015 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 18 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு இணங்கி சமுர்த்தி சங்கமொன்றுடன் 2012 ஆகஸ்ட் 03 ஆந் திகதி தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2012 நவெம்பர் 17 ஆந் திகதி வரை ரூபா 1,260,360 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 நவெம்பர் 17 ஆந் திகதி வரை நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சமுர்த்தி சங்கத்தின் தலைவரின் கையொப்பம் வேறொருவரால் இடப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தென் மாகாண சபை உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிக்கும் கைத்தொழில்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 202,250,000 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை கூட்டத்தின் போது சொல்லப்படாத 13 சதவீத கழிவு சதவீதமொன்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரகாரம் ஒப்பந்த நிறுவனத்திற்கு 2017 நவம்பர் 18 ஆந் திகதி மேற்குறித்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்த நிறுவனம் சமர்ப்பித்த 13 சதவீத கழிவு சதவீதத்தின் பிரகாரம் இருக்க வேண்டிய கழிவு மற்றும் பணமாக குறிப்பிடப்பட்டிருந்த கழிவுக்கு இடையே ரூபா 1,804,084 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iii) சட்டரீதியற்ற 13 சதவீத கழிவினை கழித்த தவறை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் அடுத்த ஒப்பந்தகாரருக்கு நிர்மாணம் வழங்கல் இடம்பெற்றிருந்தது.

(iv) 2017 நவம்பர் 30 ஆந் திகதி அத்திவாரக் கல் வைக்கும் விழா வரையிலும் ஆரம்ப நடவடிக்கைகளின் மேற்பார்வை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு 2017 நவெம்பர் 16 ஆம் திகதி ரூபா 30,750,389 மதிப்பீட்டு பெறுமதியான 06 நிர்மாணங்களுக்காக சில ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. கூறுவிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் 2017 நவெம்பர் 29 ஆந் திகதிக்கு முன்னர் திசெம்பர் 11 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஒப்பந்தகாரரால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(உ) தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி பெருந்தெருக்கள் மற்றும் ஒலிபரப்பு அமைச்சு செயலாளரின் 2016 மே 11 ஆந் திகதிய தெமாச/ககாவீ/தி.02/2015/09 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஒப்பந்தக்காரரை கறுப்பு பட்டியலில் சேர்க்குமாறு (ICTAD) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தென் மாகாண கல்வி திணைக்களப் பணிப்பாளர் அந்த ஒப்பந்த நிறுவனத்துடன் தென் மாகாண கல்வி திணைக்களத்தின் கட்டிடங்களை புனரமைப்பதற்காக 2016 மே 13 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருந்தார். மாகாண நிதி விதி 432.2.1, 432.2.2, 432.2.3 மற்றும் 432.3 இன்

பிரகாரம் கறுப்பு பட்டியல்களில் இடுவதற்கு அறிக்கையிடல், மற்றும் கறுப்பு பதிவேடு பிரதம செயலாளரினால் தயாரித்தல் மற்றும் பராமரிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

**6.9 தாமதமான செயற்திட்டங்கள்**

தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த சகல செயற்திட்டங்களையும் அவ்வாண்டின் நவம்பர் மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரை 21 செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன்2017 ஒக்தோபர் வரையிலும் 25 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 28 செயற்திட்டங்களை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்ட 02 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் விட்டுவிடப்பட்டிருந்தது.

**6.10 முறையாக கையேற்கப்படாத ஆதனங்கள்**

இலங்கை சமூக கடற்தொழில் சம்மேளனத்தின் மூலம் தங்காலை பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூவினிகம கட்டிட தொகுதி பல்நோக்கு பயிற்சி நிலையமொன்றாக மற்றும் செயற்பாட்டிற்காக, கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் அலுவல்கள், கிராமிய கைத்தொழில் மின்சக்தி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,356,208 ஆன செலவினமொன்ற மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கட்டிடம் அமைந்துள்ள காணியின் சட்டரீதியான உரித்து 2018 பெப்ரவரி மாதம் வரையிலும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள், கிராம அபிவிருத்தி, கலாசார மற்றும் கலை அலுவல்கள், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகாரம் மற்றும் உள்நாட்டு பொருளதார மேம்பாடு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், மனிதவலு மற்றும் தொழில்துறை அமைச்சினால் அமைச்சின் செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 174,080 எரிபொருள் படிகளுக்கு மேலதிகமாக 2017 சனவரி 21 முதல் ஒக்தோபர் 03 ஆந் திகதி வரை மேலதிக எரிபொருளுக்காக ரூபா 302,080 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட மாத்தறை மாவட்டத்தின் மாகாண வீதிகள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளுக்காக ஏபீசீ (ABC) கலவை கற்கள் கொள்வனவின் பெறுகை செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சோதனைப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வீதிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரங்களுக்கு இணங்க தேவையான 128602 கியுபிக் மீற்றர் ஏபீசீ (ABC) கலவை கற்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 556,097,678 செலவிட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.7.2 பிரிவின் பிரகாரம் அமைச்சரவையால் பெறுகை குழுவொன்றின் மூலம் கொள்வனவு செய்வதற்காக தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய போதிலும், பிரதம செயலகத்தின் பெறுகை குழுவின் அங்கீகாரமும் இல்லாமல் அமைச்சு பெறுகை

குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சகல கொள்வனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) இச் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட நிதிகளுக்காக ஏபீசீ (ABC) கலவை கல் வழங்கலின் போது இடம்பெற்றிருந்த நிதி முறைகேடுகள் கண்டறியப்பட்டதன் பின்னர் ஆரம்ப பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்காக பிரதம செயலாளரினால் மாகாண உள்ளக கணக்காய்வுப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் தீர்மானத்தின் பிரகாரம் கொள்வனவு வழிகாட்டல்களுக்கு இணங்காமல் ஏபீசீ (ABC) கலவைக் கல் கொள்வனவு செய்த காரணத்தினால் உத்தியோகத்தர்களால் ரூபா 14,474,248 கூட்டுத்தொகையான நிதி நட்டமொன்று ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(iii) பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு இணங்காமல் நடவடிக்கை எடுத்து நிதி நட்டமொன்றை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறிக்கையிடுமாறு பிரதம செயலாளரினால் சீஎஸ்எஸ்/2/3/43(i) மற்றும் 2016 நவம்பர் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சு செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதியின் கடிதம் மற்றும் 2006 ஏப்ரல் 23 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதியின் கடிதத்தின் பிரகாரம் மாகாண சபை அமைச்சர் ஒருவரின் உதவி பதவியணிக்காக ஒதுக்கப்பட்ட ஆகக் கூடிய வாகனங்கள் அளவு 04 ஆக இருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சின் விடயப் பொறுப்பின் அமைச்சின் 02 குழாம் வாகனங்கள் அமைச்சு பதவியணிக்கு ஒதுக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,630,800 பெறுமதியான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2006 மார்ச் 18 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2006 சனவரி 04 ஆம் திகதி அதே இலக்க சனாதிபதியின் கடிதத்திற்கு இணங்காமல் மீளாய்வாண்டின் போது தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சின் விடயப் பொறுப்பின் அமைச்சரின் தனிப்பட்ட பதவியணிக்கு 06 பேர் கூடுதலாக இணைக்கப்பட்டு ரூபா 2,460,068 சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 6.12 பதவியணியினர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தென் மாகாணத்தின் மாகாண அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | விபரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தர | அமைய/ சமயா சமய/ ஒப்பந்த | |
| i | மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் | 6059 | 4889 | 63 | 1170 |
| ii | பாடசாலைப் பதவியணியினர் | 28062 | 25883 | 08 | 2179 |
| iii | சுகாதார பதவியணியினர் | 9058 | 7470 | 197 | 1588 |
| iv | உள்ளுராட்சி மன்றங்கள் | 5775 | 5088 | 429 | 687 |
| v | நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் | 595 | 502 | 06 | 93 |
| | | 49549 | 43832 | 703 | 5717 |

(அ) 5717 மாகாண சபை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண சபையில் அமைய/ சமயா சமய / ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் 703 இருப்பதாக

## 6.13 நட்டங்களும் சேதங்களும்

(அ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய கெப் வண்டியொன்று 2016 மே 31 ஆந் திகதி குறித்த சாரதியினால் மதுபோதையுடன் தனது சொந்த தேவையொன்றுக்காக ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த போது விபத்திற்கு உட்பட்ட காரணத்தினால் ரூபா 280,500 ஆன நட்டமொன்று இடம்பெற்றாமையால் நட்டம் சாரதியினால் கராஜிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 யூன் 02 ஆந் திகதி ஆரம்ப ஒழுக்காற்று பரிசோதனையின் அறிக்கையின் மூலம் குறித்த சாரதி குற்றவாளியாக்கப்பட்டு வேலையை இடைநிறுத்துவதற்கும் குற்றம் தொடர்பாக குற்றச்சாட்டு பத்திரமொன்றை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், பிரதம செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்பு மற்றும் சாரதி சேவை பிரமாணத்தில் குறிப்பிட்ட விடயங்கள் பரீட்சிக்கப்பட்டு சாரதி தகுதிகாண் காலத்திற்கு உட்பட சாரதி பதவியின் ஆரம்ப சம்பள அளவில் வைப்பதற்கு தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது.

(ஆ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய கெப் வண்டியொன்று 2015 ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் ரூபா 4,708,960 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. எனினும், காப்புறுதி கம்பனியால் ரூபா 3,834,000 ஆன

நட்டத்தை மீள்நிரப்புவதற்கு இனங்காணப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 874,960 தொகை விபத்திற்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி சட்டமா அதிபத் திணைக்களத்தினாலும் விபத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய மூன்றாம் தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் விபத்து இடம்பெற்று 28 மாதங்கள் கடந்திருந்த போதிலும், வாகனத்தை உரிய நிலைமைக்கு கொண்டுவர முடியாதிருந்தது. எனினும், அக்காலப்பகுதியில் வாகனத்திற்காக மாதாந்த குத்தகை வாடகை மற்றும் காப்புறுதி மேவுகை கட்டணங்கள் போன்ற செலவினத்தை செலவிட நேர்ந்திருந்தது.

(இ) தென் மாகாண சபையின் திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்குரிய தீர்வு செய்யப்படாமல் காணப்படும் 80 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 12,484,107 ஆன வாகன விபத்து நட்டம் தொடர்பான சேதங்கள் மற்றும் 13 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 22,117,887 ஆதன சேதனங்கள் உட்பட மொத்த சேதங்களின் கூட்டுத்தொகை ரூபா 34,601,994 ஆக இருந்தன.

## 07. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேரான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் தென் மாகாண சபையால் உரிய நோக்கங்கள் மற்றும் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் 2018 யூன் 20 ஆந் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. தென் மாகாணத்திற்காக வருடாந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது மாகாண குறித்துரைக்கப்பட்ட மானியத் துறைகள் மற்றும் 23 மற்றும் திட்டவட்டமான மானிய பிரிவுகள் 33 இன் கீழ் செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழ் காணப்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மூலம் திட்டம் செயற்படுத்தப்படுகின்றன. எனினும், 2019 – 2021 உத்தேச மூன்று வருட மாகாண அபிவிருத்தி திட்டத்திற்காகவும் நிலைபேறான இலக்கை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு தென் மாகாண திட்டமிடல் செயலகத்தின் மூலம் சகல அமைச்சுக்களுக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த மூன்றாண்டு மாகாண அபிவிருத்தி திட்டம் 2018 யூன் 20 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8. நல்லாளுகையும் கணக்களிதன்மையும்

### 8.1 உள்ளகக் கணக்காய்வு

மாகாண நிதி விதி 82.5.2 இன் பிரகாரம் கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் விசுவாசத்தை உறுதிப்படுத்தல் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள ஏற்றுக்கொண்ட கணக்கீட்டு நடைமுறைகள் மூலம் சரியான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலுக்கான தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதா என ஆராய்ந்து பார்த்தல், மாகாண உள்ளகக் கணக்காய்வு பணிப்பாளரின் கடமையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் பிரதம செயலகம் மற்றும் மாகாண நிதியக் கணக்கு தொடர்பாக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பிரகாரம் பிரதம செயலகத்தின் கணக்காய்விற்காக 30 மனித நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

### 8.2 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் சிகிச்சை பொருட்களை எரிப்பதற்காக நன்கொடையொன்றாக கிடைத்திருந்த எரிக்கும் இயந்திரம் 2013 யூலை 07 ஆந் திகதி திருத்தியமைக்க முடியாமையால் செயற்படாதிருந்தது. பொதுவாக நாளொன்றில் 75 கிலோ கிராம் சிகிச்சை கழிவுப் பொருட்கள் சேர்வதுடன் சிகிச்சை கழிவுப்பொருட்கள் திறந்த வெளியில் எரிப்பதால் வத்தியசாலை பதவியணியினர், நோயாளர்கள மற்றும் பிரதேசவாசிகள் அதிக சிரமத்திற்குள்ளாவது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 9. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் காலத்துக்கு காலம் மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் | முறைமையின் பிரதான குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது வழமைக்கு மாறான காலதாமதங்கள் காணப்பட்டன. |
| (ஆ) வருமான நிர்வாகம் | முறையான ஆய்வொன்றும் மதிப்பீடும் இல்லாமல் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கணக்கீடு | (i) பொது வைப்புக் கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.<br>(ii) மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குக மீதிகள் தொடர்பாக திணைக்கள கணக்கு மற்றும் மாகாண திறைசேரி கணக்குகளுக்கு இடையே இணக்கமின்மை காணப்பட்டன. |